முருகப்பெருமான் துணை

**மகான் விறல்மிண்ட நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

08.06.2021, செவ்வாய்கிழமை

1. ஞானமும் தவமும் மக்களிடை
நல்சக்தியாக நிரம்ப வேண்டி
வானவரிடத்தில் வரம் பெற்று
வள்ளலாய் வந்த அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் பிலவ விடை திங்கள்
வரங்களாக இருபானைதிகதி குசன்வாரம்
(பிலவ வருடம் வைகாசி மாதம் 25ம் நாள், 08.06.2021 செவ்வாய்கிழமை)
வல்லமைபட விறல்மிண்ட நாயனார் யானும்
3. யானும் யோகபிரசன்ன ஆசி
உலகோர் நலம்பெற உரைப்பேன்
ஞானதீட்சை அருளி மக்களை
ஞானவான்களாக உருவாக்கி
4. உருவாக்கி உலகமாற்றம் தர
உயர் ஞானியாக வந்த அரங்கனை
குருவாக ஏற்று உலகமக்கள்
குடிலை நோக்கி தொடர்ந்து வர
5. வருகவே மக்களிடை மாற்றம்
வல்லமைபட ஞான பலமாகி
முருகப்பெருமான் அருளும் தயவும்
முழுமை நிலையும் கண்டுசிறப்பர்
6. சிறப்பான ஞான பூமியாக்கிட
செகத்தினில் சித்திநெறி தந்து
அறம் வளர்க்கும் அரங்கன்
ஆன்மீக உண்மை வழிகளை
7. வழிகளை யாவரும் ஏற்று
வணங்கி தொடர்ந்து வர
அழியாமை எனும் உயர்கதி
அனைவருக்கும் இலகுவாய் கிட்டி
8. கிட்டியே கலியுகம் தானும்
குருபரன் ஆசி பலம்கூடி
கட்டமிலா ஞானயுகம் ஆகும்
கருணைமிக்க ஞான ஆட்சியாக உருவாகும்
9. ஆகவே இன்னும் காலம்கடத்தா
அனைவரும் அரங்கன் திருவடி
வகையாக பணிந்து தொடர
வல்லமையான தருமம் தன்னை

**10.** தன்னையே உலகோர் ஏற்று
தக்கபடி உலகோர் பசிபிணி அகல
அண்ணல்வழி தொடர்ந்து செய்ய
அகிலம் அளவிலா நல்சக்திபட

**11.** சக்திபட ஞானசித்தர் காலத்தை
சண்முகனார் தலைமை படவே
பக்திபட இந்த உலகம் அடையும்
பாடிவந்த யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–